புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. ௧ விரோதிஞு (1889) ஆவணிமீ ௨௰௨ ஆரம்பமானது

**பத்திரக்கிரயம்.**

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5·00 |
| இங்கிலீசும் தமிழும் | 9·00 |
| இலங்கை இந்தியா | ரூ 8·00 |
| இங்கிலீசும் தமிழும் | 12·00 |
| சோவியேப்பகுதி | ரூ 9·00 |
| இங்கிலீசும் தமிழும் | 13·00 |

முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

**விளம்பரவிகிதம்.**

முதன்முறைக்கு:

| | |
|---|---|
| ,, ஒருகலம் ரூபா | 10·00 |
| ,, அரைக்கலம் ,, | 5·50 |
| ,, கால்கலம் ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிகர ணைச்சி தேங்கச் செம்பூத்த சிவமாக மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய இருள்களேங்கப் பரம்பூத்த சைவநெறிபாரோர் தாங்கப், பேர்பூத்த சிவாணந்த இனிது ஒங்கப் பிறைபூத்த சடைமவுனிப் பிரானூர் தந்த, வார்பூத்த வதிவிச்சை தொழிலென் றேது மதம்பூத்த விநாயகன்றுள் வணக்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—௪௫ } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஞு மாசிமீ ௧௭உ; (1934 மார்ஜ் 1) திங்கட்கிழமை. { இலக்கம்—௮௮



## கந்தரலங்காரம்.

பொட்டாக வெற்பைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

இ-ள். வெற்பை பொட்டு ஆகப் பொருத கந்தா - கிரௌஞ்ச மலையைத் துளையுண்டாகும்படி (வேற்படை கொண்டு) தாக்கிய கந்தசுவாமியே, இரும் காம விடாய் பட்டார் உயிரை - பெரிய காமவேட்கையில் அகப்பட்ட ஆடவர்களுடைய உயிரினை; திருகிப் பருகிப் பசி தணிக்கும் - தம்வசப்படுத்தி அனுபவித்துத் தம் வேட்கையைத் தீர்த்துக்கொள்ளும்; கட்டாரி வேல் விழியார் வலைக்கே - கட்டாரியாகிய வேற்படையை நிகர்த்த கண்களையுடைய பரத்தையரென்னும் வலையிலே; மனம் கட்டுண்டது - என்னுள்ளம் சிக்கிக்கொண்டது; தப்பிப் போனது ஒன்றற்கு - இப்படி வழிதவறிப்போனதாகிய உள்ளத்திற்கு; எட்டாத ஞானக் கலைதருவாய் - (இலகுவில்) அகப்படாத ஞானவித்தையை அடியேனுக்குத் தந்தருளுவீர் எ-று.

பொட்டு — துவாரம்; இதுபற்றியே ***ட்டில் வேலைசெய்துள்ள அழைவுறி பொட்டு என வழங்குகின்றது. உள்ளமனது அறிவு தடுக்கவும் அதனைப் பொருட்படுத்தாது பெண்ணாசையின் பாற்பட்டதாகலின் அதனைத் "தப்பிப் போனதொன்று" என்றார். ஞானகலை—ஞானமாகியகலை; இங்கே பதிஞானமாகிய திருவருளைக் குறித்தது. இனி ஞானகலை தருவாய் என்பதற்கு ஞானசாத்திரப் பொருளை உபதேசித்தருளுவீர் எனப் பொருள் கோடலுமொன்று. திருகல், பருகல் பசிதணித்தலென்னு மிவைகள் இலக்கணை. கட்டாரிவேல் இருபெயரொட்டு; வலைக்கு என்பதில் கு உருபு கண்ணுருபின் திரிபாகும். பொதுமகளிர் தம் கண்ணாகிய வலையை வீசிக் காமுகராகிய பறவைகளை அகப்படுத்துவரென்பதை "கண்வலைப்பரப்பிக் காமுகராம் புட்படுத்தி" எனப் பிறர் கூறியவாற்றானும் உணர்க. இது பெண்ணாசையைத் தவிர்த்துத் தனக்கு ஞானோபதேசஞ் செய்தருள வேண்டுமெனச் சுவாமிகள் கந்தவேளை இரந்தவாறும்.

கந்தசுவாமிக்கடவுளே, என்னுள்ளம் பெண்ணாசையிற்கட்டுண்டு தடுமாறுவண்ணம் அகலுமாறு தேவரீர் தடுத்து ஞானோபதேசஞ் செய்தருளவேண்டுமென இரந்தபடி. (௬௪)

## 1000 பேர் தவிக்கின்றனர்.

சென்ற வாரம் தென்னிந்தியாவைச் சேர்ந்த கடப்பை என்னு மிடத்தில் அக்கினி பரவியதால் 300 வீடுகள் சாம்பராயின. 1000 சனங்களில்லங்களிழந்து இருக்க வீடுவாசலின்றித் தவிக்கின்றனர். பல்லாயிர ரூபாய்கள் பெறுமதியான பொருள்களும் நாசமாயின என்று சென்ற செவ்வாய்க்கிழமை வந்த செய்தியொன்று கூறுகிறது.

## 11 நாட்களுக்குப்பின் கிளறி எடுக்கப்பட்ட பிரேதம்.

வவுனியாவைச் சேர்ந்த ஐங்குருளை என்பவன் இற்றைக்குப் 15 நாட்களுக்கு முன் இறந்து இடுகாட்டிற் புதைக்கப்பட்டான். அவன் சிலகாலத்தின் முன் ஓர் வழக்கில் சாட்சியம் கூறியமையால் அவனுடைய பகைவரே கொலை செய்து புதைத்தனர் என்று சிலர் பெட்டிசம் அனுப்பினர். அதன்மேல் சென்ற திங்கட்கிழமை அவன் பிரேதம் இடுகாட்டில் இருந்து கிளறி எடுத்து டக்டரால்சோதனை செய்யப்பட்டது. அவன் சன்னி நோயினால் இறந்தான் என்றே டக்டர் விசாரணைமுடிவில் அபிப்பிராயம் கூறினர்.

## பாம்புக் கோயில்.

பினுங்கு அற்புதம்.

பினுங்கில் ஒரு பாம்புக் கோயில் இருக்கிறது. அதனுள் நூற்றுக்கணக்கான பாம்புகள் இருக்கின்றனவாம். அவை அங்கு வணக்கத்திற்குச் செல்லும் மக்களைத் துன்புறுத்துவதில்லையாம்.

## புங்குடுதீவில் எம்பிரான் திருவிளையாடல்.

புங்குடுதீவுப் புதுக் கதிர்காமத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேகமாகும் நேரம் காலை ஏழுமணியளவில் எம்பிரான் எழுந்தருளி இருக்கும் மூலஸ்தானத்தில் முன்னொருபோது மில்லாதவாறு அடியார்கள் தெரிசிக்கக் கூடியதாக அவரது திருக்காத் தோன்றிக் காட்சி கொடுக்கப் படுகின்றது. இவ்வற்புதக்காட்சி எவரும் காணக் கூடியதாயிருக்கின்றது என்று ஓர் அபிமானி தெரிவிக்கிறார்.

## ஐரோப்பியரின் பழைய பல்லவி!

சென்ற சனிக்கிழமையன்று களுத்துறைத் தோட்ட முதலாளிமாரின் மகாகூட்டம் ஒன்று கூடியது அதில் அக்கிராசனம் வகித்த மிஸ்டர் எப். எச். கிறிபித் என்பவர், வழக்கம்போல இலங்கை அரசியலைப் பற்றியும் குறிப்பிட்டார். அவர் அது சம்பந்தமாகக் கூறியன வருமாறு:

"டொனமூர் அரசியற்றிட்டம் நன்கு வேலைசெய்யக் கூடியது ஆனால் அரசாங்கசபைக்குத் தகுதியுள்ளவர்களை அனுப்பினால்தான் இந்த அரசியலைத் திறமையுடன் நடத்தலாம்.

"இந்த இலங்கையில் 21 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷார் செய்துள்ள பிழைகளில் மிகப் பெரிது இதுவேயாகும். அரசியற்றிட்டம் மாற்றப்படுமானால், இந்த விஷயமும் மாற்றப் படல் வேண்டும்."

## தபாற்கந்தோரதிபரும் சாதிச்சண்டையும்.

—— (o) ——

புங்குடுதீவு வழக்கின் எதிரொலி.

புங்குடுதீவுத் தபாற்கந்தோரதிபரான மிஸ்டர் பீ சவரிமுத்து என்பவர் தாமோதரம்பிள்ளை என்னும் பையனை அடித்துக் காயப்படுத்தினர் என்று சென்ற சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் மிஸ்டர் என் முனிசெட்டி முன்னிலையிற் குற்றஞ் சாட்டப் பட்டார்.

நியாயவாதி மிஸ்டர் ஜி. ஜீவியஸ் பிலிப்ஸ் அவர்களும் ஸ்ரீ கே வீ. இராசையா அவர்களும் வழக்கை நடத்தினர். நியாயதுரந்தரர் ஸ்ரீ. ரீ வீ இராசரத்தினம் எதிரிக்காக ஏற்பட்டார்.

வாதியின் வாக்குமூலமாவது:

"சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ந் தேதி பின்னேரம் 4 மணியளவில் குறித்த தபாற்கந்தோருக்குச் சென்று முத்திரைகள் தரும்படி கேட்டேன். முத்திரை தராமையால், நான் தபாற்கந்தோரதிபரை மூன்று நாலு முறை கூப்பிட்டேன். எதிரியாகிய தபாற்கந்தோரதிபர் கோபங் கொண்டு கடுதாசிவெட்டும் கத்தியால் என்மீது எறிந்தார். அது என் நெஞ்சிற்பட்டுக் காயம் உண்டாக்கியது."

இப்போது சில நாட்களுக்கு முன் நடந்த புங்குடுதீவுக் கலகவழக்கில், எதிரி வேளாளருக்கு மாறாகச் சாட்சியங் கொடுத்தமையாலே வேளாளர் அவரை இப்படி மாட்ட முன்வந்திருக்கின்றனர் என்று நியாயதுரந்தரர் ஸ்ரீ. இராசரத்தினம் கூறினர்.

எதிரியின் வாக்குமூலம் வருமாறு:

"நான் புங்குடு தீவுக்குப் புதியவன் புங்குடுதீவு வழக்கில் பறையருக்காகச் சாட்சியம் கொடுக்க வொண்ணாது என அங்குள்ள செல்வாக்குள்ள பல வேளாளர் வேண்டினர். நான் மறுக்கவே, எனக்குச் சரீரதீங்கு இழைத்து விடுவதாக அவர்கள் பயமுறுத்தினர். நான் பயந்து மாகாணப் பொலிஸ் தலைவருக்கு ஓர் பெட்டிசமும் அனுப்பியிருக்கிறேன்.

"புங்குடுதீவில் உள்ள வேளாளர் எனக்கு ஒவ்வொரு நாளும் துன்பம் கொடுத்துக்கொண்டே வருகின்றனர். சென்ற டிசெம்பர் மாதம் குறித்ததினத்தன்று தபாற்கந்தோர் முத்திரை விற்குமிடத்திற்குச் சமீபமாக சிலபையன்கள் நின்று கூச்சலிட்டதால், அவர்களைப் போகும்படி றூல்தடியால் தட்டினேன். அப்போது றூல்தடி தற்செயலாகத் தாமோதரம் பிள்ளைமீது பட்டிருக்கலாம்."

விசாரணையின் பின் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்

## பூகம்பத்தின்பின் பொன்.

பீகார்ப் பூகம்பத்தின்பின் பல இடங்கள் மணற் திடர்களாய்விட்டன. அந்த மணலைப் பரீட்சிக்கையில், தங்கத் தூள்கள் அவற்றிற் காணப்படுகின்றன என்று டக்டர் ஜே. என். மிஸ்ரா கூறுகிறார்.

## ஆற்றில்மிதந்த பிணம்.

கண்டியில் இருந்து தெளிதெனைக்குப் போகும் தெருவுக்குச் சமீபமாக மகாவலி கங்கையில் ஒரு சிங்களவனின் பிணம் சென்ற திங்கட்கிழமை காணப்பட்டது. இறந்தவனின் வயது 30வரையில் இருக்குமென்று யூகிக்கப்படுகின்றது. அவன் எவ்வாறு இக்கதிக்கு ஆளானானென்பது மர்மமாயிருக்கின்றது. அவன் கட்டியிருந்த சாரம் எம். கே ஆர். என்ற எழுத்துக்கள் காணப்பட்டன.

## வீண்கதை பேசும் ஜனப் பிரதிநிதிகள்!

———•———

அரசாங்க சபையைப்பற்றி டக்ரரின் எண்ணம்.

——:o:——

நீதிஸ்தலத்திற் சாட்சியம்.

சென்ற திங்கட்கிழமையன்று டக்ரர் வீ வீ. தலாப்பா தமது மனைவி விலாவதிமீதும், அரசாங்க சபைத் தலைவர் மிஸ்டர் எ எவ் பொலஸுரேமீதும் வைத்த வழக்கின் விசாரணை ஆரம்பமாயது. டக்ரர் வீ வீ. அசரப்பா அவர்கள் தமது சாட்சியத்தை அளிக்கையில் இலங்கை அரசாங்க சபையைப்பற்றியும் சில கூறினர்.

"நீரும் உமது மனைவியும் அரசாங்க சபைக் கூட்டங்களுக்குப் போவது வழக்கமோ" என்று நியாயவாதி மிஸ்டர் ஆர். எல் பெரிரா அவர்கள் கேட்க

டக்ரர்: ஒருமுறை மாத்திரமே நான் அங்கு சென்றேன்.

நியாய: நீர் அங்கு அதிகநேரம் நின்றீரா?

டக்ரர்: நான் அங்கு அதிக நேரம் நிற்கவில்லை. அரசாங்கசபையிலுள்ள ஜனப் பிரதிநிதிகள் மணித்தியாலக் கணக்காக வீண் கதைகள் பேசிக்கொண்டிருந்தார்கள். எனவே நான் அதில் வெறுப்புற்று வீட்டிற்குத் திரும்பி விட்டேன்.

இந்த அரசாங்கசபைப் பிரதிநிதிகளைப் பற்றி நல்வார்த்தை கூறுவார் எவருமில்லையே!

## புகைரதத்திற்குட் பிணம்.

சென்ற சனிக்கிழமை தென்னிந்தியாவைச்சேர்ந்த விழுப்புரத்திற்குச் செல்லும் புகைவிரதவண்டிக்குள் ஓர் பிணம் காணப்பட்டது அப்பிணம் ஓர் பெட்டிக்குள் வைத்து இறுகக்கட்டப்பட்டிருந்தது. ஏதோ பார்சல் என்று புகைவிரத அதிகாரிகள் அதனைப்பற்றிச் சிந்திக்கவில்லை. எனினும் சென்ற சனிக்கிழமை அந்தப் பெட்டிக்குள் இருந்து துர்நாற்றம் வீசியதால், அதனைத் திறந்து பார்த்தபோது அதற்குள் அழுகின நிலைமையில் இருந்த பிணம் காணப்பட்டது. அப்பிணம் ஓர் நடுத்தரவயதுடைய பெண்ணினது. யாரோ அப்பெண்ணைக் கொலை செய்து இப்படி மறைக்கச் சூழ்ச்சி செய்தனர் என்று யூகிக்கப்படுகிறது பொலிசார் விசாரணைபுரிந்து வருகின்றனர்.

## வறுமையாற் காதலர் தற்கொலை.

தண்டையார்ப்பேட்டையில் சென்ற வாரம் 20 வயதுப்பெண்ணொருத்தியின் பிரேதம் கிணற்றில் மிதக்கக்கண்டு பொலிஸார் எடுத்தனர். விசாரணை செய்ததில், சின்னம்மாள் என்னும் அந்தநாயுடுபெண் ராமுடு என்ற ஒருவரைக் காதலித்துத் தன் பெற்றோரைவிட்டுக் காதலனுடன் சென்று, பெற்றோருக்குத் தெரியாமல் 4 மாதகாலம் வாழ்ந்து வந்தனளென்றும், பின் வறுமையின்கொடுமை தாங்கமாட்டாமல் வீட்டிற்குத் திரும்பியபோது, பெற்றோர் இழித்துரைத்ததால் அவ்விருவரும் உலகை வெறுத்து அருகிலிருந்த கிணற்றில் குதித்துவிட்டனரென்றும், முதல் நாள் சின்னம்மாள பிரேதமும் மறுநாள் ராமுடுவின் பிரேதமும் கிணற்றில் இருந்து எடுக்கப்பட்டன வென்றும் ஒரு செய்தியால் தெரிகிறது.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவூ மாசிமீ௳ ௧௮உ வியாழக்கிழமை.


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

—:o:—

### வேண்டுகோள்.

யாழ்ப்பாணத்தில் இந்துக்களாகவுள்ளவர்களின் பழைய வித்தியாதாபனம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியேயாம். இக்கல்லூரி, ஆரம்பத்தில் ஒரு சிறிய ஆங்கில வித்தியாசாலையாகத் தொடங்கப் பெற்றுப் பின் உயர்தர வித்தியாசாலையாகி, சென்ற பல வருடங்களாய் யாழ்ப்பாணத்தில் சைவமக்களின் சிறந்த கல்லூரியாக விளங்குகின்றது. இக்கலாசாலையை அக்காலத்தில் ஆரம்பித்தவர்கள் நல்ல மனசும் மேலான நோக்கமுங் கொண்டு ஆரம்பித்தமையினாற்போலும் அன்றுதொட்டு இற்றைநாள் வரையில் இக்கல்லூரி வளர்மதிபோல் விருத்தியடைந்தே வருகின்றது. வித்தியாவிருத்தி விஷயமாக இக்கல்லூரிக்கு எக்காலத்தாயினும் எவ்வகையான இடையூறும் நேர்ந்ததில்லை. இனிமேல் நேரப்போவதுமில்லையென்பதே எம் நம்பிக்கை. அக்காலத்தில் வேறு சைவ ஆங்கில வித்தியாசாலைகளும் சைவக் கல்லூரிகளும் யாழ்ப்பாணத்தில் இல்லாமையினால் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சிங்கப்பூர் மலாய்நாடுகளில் உத்தியோகார்த்தமாக வசித்து வந்த நம்மவர்களும் இக்கல்லூரியைப் பெரிதும் அபிமானித்து இதற்கு வேண்டிய வேண்டிய காலங்களில் தம்மால் இயன்ற இயன்ற பொருளுதவி வந்தார்கள். சைவமக்கள், இவர்களுள்ளும் விசேஷமாக மலாய்நாட்டிலுள்ள சைவமக்கள் உதவிய மூலநிதி இருபதினாயிரம் ரூபாவரையில் இக்கல்லூரி பெயரில் இருந்தது. இந்நிதி காலகதியிலே, கல்லூரிக் கட்டடத்தைப் பெருப்பிக்கும் விஷயத்திலும் வேண்டிய உபகரணங்களைச் சம்பாதித்து இட்டவிஷயத்திலும் செலவாகிய பின்னும் ஒரு பெரும்பாகம் அந்த மூலநிதியில் எஞ்சியிருந்தது. ஆனால், அரு. சோ ம. செட்டிகடை முறிந்தமையினால் இக்கல்லூரிக்குரிய பணத்தில் 7500 ரூபா நஷ்டம் போய்விட்டது. அதுமாத்திரமல்லாமல் பழையிலுள்ள ஒரு பெரிய தென்னந்தோட்டத்திற்கு ஈடாகக் கொடுத்திருந்த பணம் 10000 ரூபா, அத்தோட்டம் இப்பொழுது ஈட்டுக்குப் போதாமையால் அறவிடப்பட முடியாமலிருக்கின்றது. இந்த நஷ்டஞ் சங்கடங்களோடு சென்ற இரண்டு வருட காலமாகப் பணமுட்டுக் கஷ்டமும் ஏற்படலாயிற்று. இவை காரணமாக இக்கல்லூரிக்கும் சிறிது பொருண்முட்டு ஏற்பட, ஆவசியகஞ் செய்யவேண்டிய திருத்தங்களைப் பூரணமாக உடனுக்குடன் செய்துமுடித்தல் அசாத்தியமாகவிருக்கின்றது. அல்லாமலும் இப்படியான ஒரு பெரிய சாதியக்கல்லூரி பேரில் பதினாயிரம் இருபதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத திரமான மூலநிதி ஆவசியகம் இருத்தல்வேண்டும். அன்றடித்து அன்று எரியிலிட்டுச் சீவிக்கும் நிலையில் இப்புராதனமான கல்லூரியை நாம் விடவொண்ணாது. நம் சைவப் பிள்ளைகட்குச் சைவ முறைப்படி கல்வியூட்டும் நோக்கமாக, இற்றைக்கு 44 வருடங்கட்கு முன்னர் இங்குள்ள பெரியாரால் ஆரம்பிக்கப்பட்டதல்லவா! இக்கல்லூரி பழமையுடையதாதலால் இதனிடத்து அபிமானிகள் பல்லாயிரக் கணக்கானோர் உண்டல்லவா! பழைய மாணாக்கர் கணக்கிறந்தோருண்டல்லவா? ஆதலால் இக்கல்லூரிக்கு பொருண்முட்டு இப்பொழுது நேர்ந்துவிட்டாலும் இம்முட்டு நீடித்துநிற்க முடியுமா? முடியாது.

இவற்றையெல்லாம் உத்தேசித்து, சென்ற ஞாயிற்றுக்கிழமை (25-2-34) பின்னேரம் இக்கல்லூரி மண்டபத்தில், அதிகாரசபையார் பழைய மாணவர் அபிமானிகள் உபாத்தியாயர்கள் முதலானோரைக்கொண்ட ஒரு மகாசபை கூட்டப்பட்டது. அதன் வரலாற்றை இப்பத்திரிகையின் சென்ற திங்கட்கிழமைப் பிரசுரத்தில் வெளியிட்டுள்ளோம். கல்லூரி பொருட்டு நிதி சேர்ப்பதற்கான ஒரு உபசபை அத்தினத்தில் உடனே ஏற்பட்டுள்ளது. அச்சபையார் மிக்க ஊக்கத்தோடு பணஞ்சேர்க்கும் விஷயமாக உழைப்பதற்குச் சித்தமாயிருக்கின்றார்கள்.

இந்தச் சமையத்தில் சைவநன்மக்களெல்லாரும் இதற்குப் பொருளுதவிபுரிதல் ஆவசியகமாகும். இவ்விஷயத்திற் சைவநன்மக்களை, கல்லூரி அதிகாரிகள், பழைய மாணவர்கள், உபாத்தியாயர்கள், அபிமானிகள் எனத் தொகுத்தலாகும். இக்கல்லூரியின் அதிகாரிகளாயுள்ளார் செல்வஞ் செல்வாக்கு அபிமானம் உதாரத்துவம் முதலாம் பெருங் குணங்களோடு கூடியவர்களாவர். ஆதலின் இவர்கள் வருடந்தோறும் குறித்த ஒரு தொகைப்பணம் உதவி ஏனையோரும் தம்மைப் பின்பற்றச் செய்தல் வேண்டும். இரண்டாவதாக பழைய மாணவர்கள் யாழ்ப்பாணத் திருப்பினும் வேற்றூர்களில் வசிப்பினும் ஆங்காங்கு சபைகூட்டி அச்சபையின் பெயரால் ஒவ்வொரு தொகைப் பணம் உதவுதல்வேண்டும். மூன்றாவதாக, இக்கல்லூரி ஆசிரியர்களும் இதன் கிளைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் தங்கள் வேதனத்திற்குத் தக்கபடி தம்மால் இயன்ற தொகையை மனப்பூர்வமாக உதவுதல் வேண்டும். இறுதியாகவுள்ளவர்கள் அபிமானிகள்; இந்த அபிமானிகளுள் மாணாக்கரின் பெற்றோர் சுற்றத்தாரும் அடங்குவர். இவர்களும் தங்கள் தங்களால் இயன்ற பொருளை உதவுதல் நன்றாம். இப்படி எல்லாருஞ் செய்யின் ஒருபோதும் இந்த வித்தியாதாபனத்திற்குப் பொருள் முட்டு ஏற்படமாட்டாது. இதன்கண் செய்யக்கூடிய திருத்தங்களையும் விருத்திகளையும் இலகுவிற் செய்தலும் முடியும்.

இனி இக்கல்லூரி விஷயமாக ஆவசியஞ் செய்யவேண்டியது இன்னுமொன்றுளது. கல்லூரி அதிகாரிகளாயினுமாகுக, பழைய மாணவர் ஆசிரியர் அபிமானிகள் எவராயினுமாகுக, எக்காரணத்தாலாயினும் தங்கள் பிள்ளைகளையும் தங்கள் செல்வாக்குட்பட்ட பிள்ளைகளையும் இக்கல்லூரியிற்படிக்கத்தக்க வகுப்புகள் இருக்கும் வரையில் வேறு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புதில்லை என்ற விரதம் பூண்டவர்களாய் இருத்தல்வேண்டுமென்பதே.

மேலும் இக்கல்லூரிக்கு 13 கிளைப் பள்ளிக்கூடங்கள் உள்ளனவென அறிகிறேம். அங்ஙனமாயின் அந்தப் பதின்மூன்று பள்ளிக்கூடங்களில் உள்ள உபாத்தியாயர்களும் தங்கள் பள்ளிக் கூடங்களிலுள்ள வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்பிற்குரிய பிள்ளைகளை இக்கல்லூரியிலேயே வந்து சேர்ந்து படிக்கும்படி அவர்கள் பெற்றோர் மூலமாகத் தூண்டுதல் செய்து அனுப்பி வைத்தல் வேண்டும்; ஒவ்வொரு பள்ளிக் கூடமும் வருடந்தோறும் தனித்தனி பத்துப் பிள்ளைகளை அனுப்பினும் வருடத்தில் 130 புதிய பிள்ளைகள் வந்து சேர்வாரல்லவா? இவைகளைச் சைவ நன்மக்கள் சிந்திப்பார்களாக.

---

## உலகம் பலவிதம்.

[84-ம் இலக்க (15-2-34) பத்திரிகைத் தொடர்.]

அமுதாம்பிகை கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அது பாரதம்போற் பருத்திருந்தது. கடிதம் எழுதியவர் தன் கணவன்றானே என்று அதன் இறுதியைப் பார்த்தாள்; அவர் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கவலையோடும் பயபக்தியோடும் ஆர்வத்தோடும் அக்கடிதத்தை மெல்லப் படித்துப் பார்த்தாள். ஆவலோடு தன் மகள் முகக்குறிப்பை அவதானித்துக்கொண்டும் பதிலை எதிர்பார்த்துக்கொண்டும் நின்ற தாய், மனஞ் சகியாளாய், "பிள்ளை, என்ன எழுதியிருக்கிறார். சொல்லலாமென்றால் சொல்லேன்" எனலும், "அம்மா, உங்களை பொறுத்தும் ஒரு இரகசியமா, அவர் வேறொன்றும் எழுதவில்லை; மெத்தக் கவலைப்பட்டு எழுதியிருக்கிறார்; தான் செய்ததெல்லாம் பெருந்தவறென்று வருத்தப்படுகிறார்; பிள்ளைகளையுங்காண ஆசைப்படுகிறார்; நான் அந்த இடத்தை விட்டு வந்தபிறகு சாப்பாட்டு வசதி அவருக்கு இல்லைப்போல் இருக்கிறது; பாவம்!......" என்று கவலையோடு அமுதாம்பிகை சொல்வதற்கு இடையில், அவள் தாய், "அது சரி, மகளே, தன் பிள்ளைகளைக் காண அவர் ஆசைப்படுகிறாரல்லாமல், உன்னைக் காண ஆசையில்லையாமோ; அதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லையோ" என்று கேட்க, "என்னைப்பற்றியும் எழுதித்தானிருக்கிறார்" என்று மகள் சொல்ல, 'எடி பிள்ளை, ஏன் விழுங்குகிறாய்? அதை ஒருக்காற் படித்துவிடேன்; உன்னைப்போல நான் அந்தநாளில் நாலு எழுத்தறிந்திருக்காமல் இப்படியெல்லாமேன் கேட்டுக்கொண்டு நிற்கப்போகிறேன்" என்று சொல்ல, மகள் படிக்கத்தொடங்க, தலைவாசலில் முருகரம்மானோடு பேசிக்கொண்டிருந்த வேலாயுதப்பிள்ளையும் அங்கே வந்து, "மகளே, அவர் என்ன எழுதியிருக்கிறார்" என்று கேட்க, மகள் 'நீங்கள் படித்துப்பாருங்கள்" என்று காகிதத்தைத் தகப்பனிடம் நீட்டினாள். "அது சரியல்ல, அவர் உனக்கு எழுதின காகிதத்தை நான் ஏன் பார்ப்பான்; நீ படித்துவிட்டுப் பொழிப்பை எனக்குச் சொல்லு; முருகரம்மான் வெளியில் இருக்கிறார்; நான் அவருக்கும் உதைப்பற்றிச் சொல்லவேண்டும்" என்று வேலாயுதம்பிள்ளை கூறிவிட்டுத் தலைவாசற் பக்கம் போய் முருகருடன் பேசிக்கொண்டிருந்தார். மகள் அக்கடிதத்தைத் தாய் கேட்கப் படிக்கின்றாள்.

௧.

... ... ... ...
... ... ... ... ...

"கண்ணே அமிர்தம்!

உன் கணவனென்றிருக்கும் நான் இப்பொழுது எழுதியனுப்பும் கடிதத்தை ஏற்றுப் படித்துப் பார்ப்பாயோ, இல்லாவிட்டால் வாங்கி என் கடிதம் என்று கண்ட மாத்திரத்தே பிடித்துக் கிழித்துக் கசக்கிக் காலில் இட்டு மிதித்து உழக்கி விடுவாயோ உன் மனநிலை எப்படி யிருக்கின்றதென்பதை நான் உள்ளபடி அறியேன். நான் உனக்கு ஒரு கடிதம் எழுதவேண்டுமெனத் தொடங்கி ஏறக்குறையப் பதினைந்து நாட்கள் வரையிற் கழிந்தன. என்ன விதமாகக் கடிதமெழுதுவதென்பதையிட்டு எண்ணியெண்ணியே இத்தனை நாட்களுந் தொலைந்தன. இக்கடிதத்தை இப்பொழுதும் மனம் கூசிக்கூசியே எழுதுகின்றேன். கேடு வரும்போது மதிகெட்டுவரும் என்ற விதமாய், பொல்லாதகாலம் வரவே எனக்கு விபரீதமான புத்தி ஏற்படலானது. கெட்டவர்களுடைய கூட்டுறவு வந்துசேர்ந்தது. தெய்வத்தை மறக்க நேர்ந்தது. உன்னையும் என்பிள்ளைகளையும் ஒரு நிமிஷமேனும் விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாத நான் கெடுகாலத்தினால் உங்களை மறந்திருக்கப் பழகிவிட்டேன். உப்பின் அருமை உப்பு ஒழிந்தாலே தெரியும் என்றமாதிரி நீ இந்த வீட்டைவிட்டுப் போனபின்பே உன் அருமை எனக்குத் தெரியவந்தது; அவ்வளவோடு நின்றுவிட்டதா! இல்லை! இல்லை! நீ உங்கிருந்து கவலைப்பட்டமையினாற் போலும், எந்தநேரம் நான் கண்களை மூடினேனோ, கொஞ்சம் உறங்கினேனோ, அந்த நேரமெல்லாம் உன்னைப்போல் ஓர் அழகிய பெண்ணுருவம் வெளிப்பட்டு என்னைச் சீறிச் சினக்கவும் வெருட்டியும் பயமுறுத்தவும் துயர்ப்படுத்தவுங் காணுகிறேன். இதனைச் சிலர் கனவென்றுஞ் சிலர் நினைவென்றுஞ் சொல்வர். ஆனால் நான் உனக்குச் செய்த அநியாயங்களும் சிறுப்பினைகளுமே திரண்டு ஒரு பெண்ணுருவாகி என்னை இப்படி வருத்தத் தலைப்பட்டதென்பதே என் கொள்கை. கண்ணே, உனக்கு நான் செய்த அக்கிரமங்களை இப்பொழுது நினைக்க நினைக்க என்னெஞ்சே என்னைச் சுடுகின்றது. எனக்குப் பயம் உண்டாகின்றது. எனக்கு நீ பெண்ணாக வந்தமையால், பேடி பிடித்த வாள் போலவும், செவிடன் காதிற் சங்கநாதம் போலவும் குருடன் முகத்திற் கண்ணாடிபோலவும் குடத்துள் வைத்த தீபம் போலவும், கழுதையின் முதுகில் ஏற்றிய குங்குமப் பொதிபோலவும், சங்கீதமறியான் கையிற் கொண்ட யாழ்போலவும், குரங்கின் கைப் பூமாலை போலவும் ஆனாய் என்பது நிசம்.

அமிர்தம், உனக்கு நான் அதிகம் எழுதி உன்னை இன்னமும் வருத்துவதனால் வரும் நன்மை யாதுமில்லை. அந்த வஞ்சகனான சின்னத்தம்பி யென்பவனே, என்னை இனிமேல் ஈடேறுதபடி கெடுத்துவிட்டான். அவனே எனக்குக் குடிவெறியைப் பழக்கிவிட்டான்; அவனே வேசியர் கூட்டுறவைச் சேர்த்து விட்டான்; அந்தத் துரோகிதான் என் மானம் மரியாதை ஒழுக்கம் எல்லாவற்றையும் கெடுத்தவன். என்னிடத்துள்ள பணம் முழுவதையும் கள்ளுக்கும் சூதுக்கும் வேசிக்கும் இன்னுமுள்ள தீமைகளுக்கும் செலவழித்து விட்டு நான் இப்பொழுது ஒட்டாண்டியாய் நின்று பாதவிக்கின்றேன். என்னை முன்னர் அறிந்து மதித்து வந்தவர்களெல்லாரும் இப்பொழுது என்னைப் புல்லனென்று அவமதிக்கத் தலைப்பட்டுக் கொண்டார்கள். உன்னையும் பிள்ளைகளையும் நான் இவ்விடத்திலிருந்து துரத்திவிட்டேனென்பதே இங்குள்ளாருடைய எண்ணம்; அதனால் நம்முடைய ஊரவர்களாய் இங்கு வந்திருப்பவர்கள் எவரும் என்னுடன் பேசுவதுமில்லை; என் வீட்டிற்கு வருவதுமில்லை. உன்னை இன்றி நான் இங்கிருந்து உத்தியோகம் பார்த்தலும் முடியாது. ஆதலால், போனதெல்லாம் போகட்டும்; நான் உனக்குச் செய்த பொல்லாங்கு எல்லாவற்றையும் மறந்து ஒரு வேற்றுமையுமில்லாமல், நீ உன்பிள்ளைகளுடன் இங்கு வந்திருந்தாலே நானும் மன ஆறுதலாக இருக்கமுடியும். இனிமேல் நான் கெட்ட கூட்டங் கூடமாட்டேனென்றும் உன் எண்ணத்துக்கு மாறாக நடக்க மாட்டேனென்றும் தொடக்கத்தில் நாங்கள் எவ்விதம் பரஸ்பரம் விசுவாசமாக இருந்தோமோ அப்படியே இனிமேலும் இருப்பேனென்றும் உனக்கு உறுதிப்பண்ணித் தருகிறேன். மாமா மாமிக்கும் என் சுகத்தைச் சொல்லி அவர்களையும் இனிமேல் என் விஷயமாகக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லு. நாற்றுள் 60 ரூபாவுக்கு "மணிதுடர்" வைத்திருக்கிறேன். அதற்குக் கையெழுத்திட்டு மாற்றுவித்து ஆகவேண்டிய செலவைச் செய்யவும். பதில் எழுதினால் அடுத்தகிழமை "லீவ்" பெற்றுக்கொண்டு உங்களைக் கூட்டிக்கொண்டு வரும்படி உவ்விடம் வருவேன். பதில் காத்திருக்கிறேன்.

இங்ஙனம்,
உங்களை ஒருகாலும் மறந்திருந்த
பே. இராசையா.

* * *

கடிதம் வாசிக்கும்போதெல்லாம் அமுதாம்பிகை கவலைப்பட்டாள்; கண்ணீர்விட்டாள்; நெட்டுயிர்த்தாள். தாய் மிகவும் ஆநந்தமடைந்தாள். "பிள்ளை, இப்படி அவர் எழுதியிருக்கிறாரே உன் எண்ணமென்ன? நீ போவதோ? விடுவதோ?" என்று கேட்க மகள் உடனே புறப்பட்டுப் போகவேண்டுமென்பதே அவளுக்குப் பிரியமானாலும், அதனை வெளிவிடாமல், "அம்மா, நீங்களும் அப்பாவுஞ் சொல்லுகிறபடி செய்கிறேன" என்றாள். தாய் உடனே தலைவாசற் பக்கத்தே சென்று, தன் மருமகன் எழுதிய கடிதத்தின் சாரத்தைத் தன் புருஷனுக்கும் முருகரம்மானுக்குஞ் சொன்னாள். வேலாயுதம்பிள்ளை முருகரைப் பார்த்து "அம்மான், என்ன செய்வது? அந்த ஆள் வந்து கூப்பிட்டால் என் மகளும் பிள்ளைகளும் போவதுதானே முறை" என்றார். "தம்பி, அதற்குந் தடையோ; புருஷன் பெண்சாதிக்கிடையில் பிணக்கு வருவது வழக்கந்தான்; பிறகு அவரவர் தாம் தாம் செய்த பிழையைச் சிந்தித்துக் கோபமாறிச் சமாதானப்படுவதும் வழக்கந்தான். மருமகனை வரவழைத்துக் கொண்டு மற்றக்கிழமை வரும்படி பிள்ளையிடஞ் சொல்லி உடனே பதில் எழுதிவியுங்கள். நான் வந்த இடத்தில் இப்படிக் கடிதம் வந்தது எனக்குப் பெரிய சந்தோஷம். நான் உங்களுக்காக ஒருபோது அடுத்த கிழமை வரையில் உங்கள் மருமகனிருக்கும் இடத்திற்குப் போகவேண்டி வருமோ என்று பயந்துகொண்டிருந்தேன். என்னுடைய நல்லகாலந்தான் இந்த நேரத்தில் இந்தக்கடிதம் வந்தது; இன்னும் கொஞ்சநாட்செல்ல இங்கே பொறுத்த வேலை எனக்கு இருக்கிறது" என்று முருகர் சொன்னார். வேலாயுதம்பிள்ளை "என்ன அம்மான் பொறுத்த வேலை" என்று கேட்க, "தம்பி, அதைப்பற்றி இப்பொழுது கேட்காதே; அது பெரிய பாரதம்; இன்னொருமுறை இந்தப் பக்கமாக வரும்போது சொல்லுகிறேன்" என்று முருகர் சொல்ல, "அதைப் பிறகு சொல்லலாம், அம்மான், என்ன விஷயமாக என்பதை மாத்திரம் இப்பொழுது சொல்லிவிட்டாற் போதும்" என்று வேலாயுதம்பிள்ளை கேட்டார். 'வேறொன்றுமல்ல; எங்களுடைய ஆட்கள் கொஞ்சப்பேர் தப்பி, அந்தக் கவுன்சிலுக்குப் போகவேணுமென்று இந்த நாட்களிற் கங்கணங்கட்டிக் கொண்டு நிற்கிறார்கள். அவர்களுள் இரண்டு மூன்று பேர், என்னையும் தங்களுக்கு உதவி செய்யும்படி தனித்தனி வந்து கேட்டிருக்கிறார்கள்; அதுதான் பெரிய சங்கடமாயிருக்கிறது. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலைமையில் இருக்கிறது என்பாடு; அந்தக்கதை இனிமேலாகட்டும்; பிள்ளைக்கு நீங்கள் நல்ல புத்தி சொல்லி, அவர் வரும்போது அவரோடு அனுப்பிவையுங்கள். அவருக்கும் இனிமேல் குடித்தனம் நடத்தவேண்டிய முறைகளை அவரையுங் கொண்டு சொல்லுவியுங்கள்; ஒரு குறையும் வராது; நான் போய் வருகிறேன்" என்று முருகர் வேலாயுதம்பிள்ளைக்கும் மனைவிக்குஞ் சொல்லி விடைபெற்றுக்கொண்டு போனார்.

* * *

அமுதாம்பிகை அன்றைக்கே தன் கணவனுக்கு அன்பான கடிதமொன்றெழுதி அதில் தன்னையும் பிள்ளைகளையும் விரைவில் வந்து கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றுங் கேட்டிருந்தாள். அதன்படி அடுத்த வாரம் இராசையா விடுதலைபெற்று வந்து சில நாள் தன் மனைவி வீட்டில் நின்று பின் மனைவியையும் பிள்ளைகளையும் உடன் கூட்டிச்சென்று, முன்போல அன்பாகவும் ஆசாரவாகவும் அந்நியோன்னியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தான்.

---

### ஆத்திரமா?

**அசாப்பா விவகாரத்து வழக்கில், வாதியான டக்டர் லீ வீ. அசாப்பா நேற்றும் சாட்சியங் கொடுத்தார். அவர் நீதிஸ்தலத்தை விட்டுப் புறப்படும் போது நீதிஸ்தலத்தில் நின்ற ஆரோ ஒருவன் அவருடைய கோற் சட்டையில் எண்ணெய்ப் பதார்த்தம் ஒன்றை ஊற்றிவிட்டு ஓட்டம் பிடித்தானாம்! எனினும் அவன் உடனே சிறையாய் நீதிபதி முன்னர்க் கொண்டு வரப்பட்டான். அவன் பொலிஸ் தானத்தில் நேற்று அடைக்கப்பட்டான்.**

# தற்போதைய அரசியல் நிலைமை

## அரசியற்றிருத்தம் ஏற்படும் கருமமா?

## தமிழ் மக்களும் பாதுகாப்புக்களும்.

## தமிழ்மக்கள் சிந்திக்கவேண்டியன

## திரு. பாலசிங்கத்தின் சிரிய வேண்டுகோள்.



[தற்போது தமிழ்மக்களுக்கு நெருக்கடியான காலம்; வகுப்புவாதிகள் ஒருபுறம்; அரசியற்றிருத்தம் வேண்டும் என நிற்பார் ஒருபுறம்; இந்த நேரத்தில் தமிழ்மக்களுக்கு உண்மையாகவே ஆவசியகம் வேண்டற்பாலது யாது? அதனை எவ்வாறு பெறலாம்? யாரிடம் பெறலாம்? எம் சகோதரரிடமிருந்தா? பிரித்தாளும் தந்திரத்தைக்கொண்ட அந்நியரிடமிருந்தா? என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி, இலங்கை ஜனத்தலைவர்களுள் ஒருவரும், அரசியல் ஞானியும், பொருளாதார நிபுணருமான ஸ்ரீ க. பாலசிங்கம் அவர்கள் இச்சமையத்தில், யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் செயற்பாலது யாது என்பதுபற்றி விடுத்திருக்கும் வேண்டுகோள், நாட்டின் நலத்தைப் பொதுவாகவும், தமிழர் நலத்தைச் சிறப்பாகவும் கொண்டுள்ள தமிழ்மக்கள் யாவராலும் ஒருமுறை இருமுறையல்லப் பன்முறை படித்து அவதானிக்கற்பாலதாகும்.]

யாழ்ப்பாணத் தமிழர்களே!

யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களாகிய உங்களுக்கே யான் பின்வருவனவற்றைக் கூறுகின்றேன் அன்றி வேறெவர்க்குமல்ல; எனவே, எமது அபிப்பிராயங்களை (ஆங்கிலப்) பத்திரிகைகள்மூலம் வெளியிடுதல் தகுதியல்ல என்பதே எனது எண்ணயாகும்.

தமிழ்மக்களாகிய எமக்கு அரசியலில் பாதுகாப்புகள் வேண்டும் என்பது சிலர் கொள்கை; எமக்குத் தேவையான பாதுகாப்புகள் யாவை, அவற்றை எவ்வாறு பெறுதல் வேண்டும் என்னும் இன்னோரன்னவற்றைப் பற்றிச் சிந்திக்கையில் அவற்றோடு சம்பந்தப்பட்டுள்ள சில விஷயங்களைப்பற்றி ஆராய்தல் ஆவசியகமாகும்.

தற்போதுள்ள டொனமூர் அரசியற் திட்டத்தைச் சீர்திருத்துவது சம்பந்தமாக தமிழ்மக்களாகிய நாம் தலையுடைக்க வேண்டியதில்லை. அது—அதாவது டொனமூர் அரசியற்றிட்டம்—உடனே மாற்றப்படும் என்பதும் சந்தேகமே! தற்போதைய நிலைமையை அவதானிக்குமிடத்தில், அது இப்போது மாற்றப்படமாட்டாதென்றே கூறலாம்.

டொனமூர் அரசியற்றிட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என மந்திரிமார் எடுத்தாண்ட தீர்மானத்திற்கு ஆதரவாய், கண்டிச் சிங்களர் நின்றனர் எனினும், முந்தியே அவர்கள் அத்தீர்மானத்தைக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர். அகில இலங்கைத் தேசிய காங்கிரஸ் எனப்படும் தேசிய மகாசபையும் மந்திரிமாரின் திருத்தப் பிரேரணைகளை ஆதரிக்கும்போல் தெரியவில்லை. சென்றமாதம் நடந்த தேசிய மகாசபைக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்தவர் அப்பிரேரணைகளைக் கண்டபடி கண்டித்ததில் இருந்து எம் கூற்றின் உண்மை விளங்கும்.

டொனமூர் அரசியற்றிட்டம் நூநமானது (குறைவானது), எமது சுவதந்திரத்தைக் கெடுப்பது என்பதை உணர்ந்து அதற்குமாறுகக் கருமம் ஆற்றி, அரசியற் சட்டம் வெளிவந்தபின்னரும் மும்முரமாக எதிர்த்தவர்களான தமிழ்மக்களும் இப்போது பரஸ்பரம் ஒற்றுமைபூண்டவர்களாயில்லை. அரசியல் விஷயத்தில் அவர்கள் இப்போது பரஸ்பரம் அபிப்பிராயபேதங் கொண்டவர்களாயிருக்கின்றனர்.

1933ம் வருஷம் ஜனவரி மாதம், குடியேற்ற நாடுகளின் உபமந்திரியான சேர் சாமுயல் வில்ஸன் என்பவர் இலங்கைக்கு வந்தபோது தமிழர்களில் ஒரு பகுதியார் அவரைக்கண்டு ஓர் மனுவைச சமர்ப்பித்தனர். "தற்போது, ஸ்திரமான அரசியல் நடக்கும் என்பதற்கும், ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியாரை அடக்கமுயற்சிசெய்யார் என்பதற்கும், டொனமூர் அரசியற் திட்டத்தின்படி தேசாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாத்திரமே உத்தரவாதமாகும். இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சாதியினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அம்சங்கள் இல்லாத எந்த அரசியற் திருத்தமும் தமிழ்ச் சாகியத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது........................ ஒருஜாதியார் இன்னொரு ஜாதியாரை அடக்கியாள்வதைத் தடுப்பதற்கான வழிவகைகள் இருக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் நோக்கம்; ஒருஜாதியார் இன்னோர் ஜாதியாரை அடக்கியாள்வதைத் தடுப்பதற்கான பாதுகாப்புகளே இருத்தல் வேண்டும். வேறுவித பாதுகாப்புக்களால் ஆம்பயன் இல்லை" என்று அம்மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இன்னோர் சிறுபான்மைச் சாதியினரான முஸ்லீம்களை எடுத்துக்கொள்வோம். தமக்குக் கூட்டுத்தொகுதி வேண்டாம். தனித்தொகுதியே வேண்டுமென்று கேட்குமாறு முஸ்லீம்கள் இங்கிலாந்திற்கு ஓர் தூதக்கோஷ்டியை அனுப்பினர்.

ஆனால் தனித்தொகுதி ஏற்படுத்துவதைச் சிங்களரும் ஐரோப்பியரும் எதிர்க்கின்றனர். மந்திரிமாரில் ஒருவர் கட்டாயம் முஸ்லீமாய் இருப்பதற்காக அரசியற் திட்டத்திற் பிரமாணம் இருத்தல் வேண்டுமென்றும் முஸ்லீம்கள் கேட்கிறார்கள். ஆனால் அப்படியான ஒழுங்கு,—அதாவது மந்திரிமாரில் இன்ன ஜாதியாருக்கு இடம் ஒதுக்கிவைக்கப்படல் வேண்டும் என்ற ஒழுங்கு—முஸ்லீம்களை ஒழிந்த ஏனைய வகுப்பினரால் நன்றெனக் கருதப்படவில்லை என்பதே எனது எண்ணம். ஐரோப்பியர் தமக்கே தனித்தொகுதி தேவையில்லை என்று நிற்பதால் மற்றச்சாதியினர் தனித்தொகுதி வேண்டுமென்று கேட்பதை ஆதரிக்கமாட்டார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். மத்தியமாகாணம், ஊவாமாகாணம் சப்பிரகமுவாமாகாணம் என்னும் மாகாணங்களில் இருந்து ஜனப்பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் தமக்கு அதிகம் செல்வாக்கு உண்டு என்பதே இந்த ஐரோப்பியருடைய மனப்பூர்வமான எண்ணமாகும். இந்த மாகாணங்களில் தம் கொள்கைகளோடு ஒத்துப்போகாத, தம்மீது நன்னோக்கம் கொண்டிராத அரசாங்கசபை அபேட்சகருக்கு மாறுகக் கருமம் ஆற்ற அவர்களால் முடியும். மந்திரிமாரின் திருத்தப் பிரேரணைகள் சம்பந்தமாகக் கடைசியாக நடந்த விவாதத்தில் எவ்வளவோ காரியத்தைத்தாம் சாதித்துவிட்டதாக இந்த ஐரோப்பியர் தமது பத்திரிகைகளில் வெளியாக எழுதவும் தொடங்கிவிட்டனர். தமது சாகியத்தாருள் உள்ளவர்கள் அரசாங்கசபையில் இப்போதிலும் பார்க்கக் கூடிய ஸ்தானங்கள் வகிக்க வேண்டும் என்று சிறுபான்மைச் சாதியினர் வாதித்தால், "அதற்கு தனித்தொகுதி உதவாது, தேசாதிபதி குறைந்த பிரதிநிதிகள் உள்ள சமூகத்தினரில் இருந்து, தமது அதிகாரத்தினால், சிலபிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்; அதுவே சிறந்த முறை" என்று ஐரோப்பியர் கூறுகின்றனர். இந்த ஒழுங்கினைத் தமிழரும் முஸ்லீம்களும் வெறுத்து எதிர்க்கின்றனர். தற்போதைய அரசியலின்படி ஐரோப்பியருக்குக் கூடிய அதிகாரங் கிடைத்திருக்கிறது; அதாவது, அவர்களுடைய ஜனத்தொகைக்குத் தக எவ்வளவு அதிகாரம் அளிக்கப்படல்வேண்டுமோ, அதிலும்பார்க்கப் பன்மடங்கு அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு அதிகாரத்தையும் ஐரோப்பியர் விட்டுக்கொடுப்பார்களா? அரசியற்றிருத்தம் வேண்டும் என்பார்களா? எனவே, அவர்களும் அரசியல் மாற்றத்திற்குமாறுக நிற்கின்றனர்.

இன்னும் 1931ம் ஆண்டில், இலங்கையர் யாவரும் ஏகோபித்து அரசியற் சீர்திருத்தம் வேண்டுமென வாதித்தனர். இப்போதெனிலோ நிலைமை மாறிவிட்டது. அரசியலைத் திருத்தவேண்டும் என்னும் விஷயத்தில் ஒற்றுமை இல்லை. அரசாங்கசபைக்குள் இருந்துகொண்டே அரசியற் சீர்திருத்தம் பெறுவதற்கான கருமங்களை ஆற்றுவோம் என்று வாக்குறுதி கொடுத்துச் சென்றவர்களிலும் பலர் இப்போது அரசியற் சீர்திருத்தத்திற்கு மாறுக நிற்கின்றனர்.

—வரும்.

## தமிழரின் பூர்வீக நாகரிகம்.

—o—

(ஸ்ரீ. எஸ். சோமசுந்தர பாரதியார்.)

தமிழர்கள் தொல்காப்பியர்காலத்துக்குமுன்பே, சிறந்த நாகரிகமுற்றிருந்தனர். தொல்காப்பியர் தனக்குமுன்பு இருந்த இலக்கியங்களைப் பார்த்தும், தான் கண்ட உலகியலைப்பற்றியும் நூல் உரைப்பதாகச் சொல்லியிருப்பதிலிருந்தே அவர்காலத்துக்கு முன்பே இலக்கியம் ஏற்பட்டிருந்ததால் தமிழ்மக்கள் சிறந்த முன்னேற்ற நிலையெய்தியிருந்தனரென்பது பெறப்படுகின்றது. தமிழர் பிறநாட்டினின்றும் குடியேறியவர்களல்லர். அகநானூறு முதலியன். ஒவ்வொரு மக்களும் ஒவ்வொரு குறிக்கோள் கொண்டு வாழ்தல் இயற்கை. தமிழர் கொண்ட குறிக்கோள் யாது? மக்களால் நன்கு மதிக்கப்படும்பொருள்களையெல்லாம் குறிக்கோளாகக் கொண்டனர். அப்பொருளாவது அகப்பொருள், புறப்பொருள் என்பனவாம். அகப்பொருள் மனத்தில் அறியா இன்பம் நல்குவது. வெளியுலக இன்பம் நல்குவது புறப்பொருள். இப்பொருள்களைப்பற்றியே அக்கால இலக்கியங்கள் எழுந்தன. அகத்தைக்காதல்முறையென்றும் புறத்தைப் போர்முறையென்றுங்கொண்டனர். தமிழர்கள் வடவேங்கடம் தென்குமரிவரையில் பிறருடன் தொடர்பில்லாது தனித்து வாழ்ந்ததால் போர் முதலிய செய்தற்கு இடமில்லாமல் இனிதுவாழ்ந்தனர். அவர்களுடைய களவுமுறை பிழையெனக் கருதுவார் சிலருளர். ஆனால் அது அதன் சிறப்பினை உணராதாரின் கூற்றேயாகும். "அன்பும் மடனும்" என்னும் சூத்திரத்தின் அரும்பொருளைத் தருகி ஆராயின் அதன் சிறப்பு தெற்றென விளங்கும். அன்பு முதலிய நான்கும் கைகூடப்பெற்ற பின்னரே கற்புமணம் நிகழும். அம்மணம் தமிழர்களுடைய சிறந்த நாகரிகத்தைப் புலப்படுத்துவதாகும்.

தமிழர்கள் பேரின்மை என்னுங் காரணத்தால் வீரமின்றி இருந்தனரல்லர். தாமாக வலிந்து ஒருவரிடம் போர்க்குச் செல்லாது, பிறர் தம் நிலத்திற்கு வந்து போர்க்கு அழைத்தால் அவருடன் எதிர்த்து நின்று போர் செய்து வெல்லும் ஆற்றலுடையவராக இருந்தனர், இஃது தொல்காப்பியத்தால் நன்கு விளங்கும் சங்ககாலத்துக்கு முன்னர் எழுந்த திருக்குறளிலும் இது நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தமிழர்களின் போர்முறைச் சிறப்பு நன்கு விளங்குகின்றது. தொல்காப்பியர் தமது நூல்களில் யாண்டும் ஜாதியைப்பற்றிக் கூறினாரில்லை. திணைகளை வகுத்து அதற்கேற்ற ஒழுக்கங்களைக் கற்பித்து எங்கும் உயர்வு தாழ்வு இல்லாதபடி செய்தனர். ஆரியம் ஆரியர்களுக்கே உரியதென்று சில தமிழர்கள் தவறாக எண்ணி அதைப் புறக்கணிக்கின்றனர். அவ்வாறு செய்வது தவறு. ஆரியரல்லாதார் பலர் வடமொழியில் நூல்களை இயற்றியுள்ளனர். ஆரியமும் ஒரு பொதுமொழியேயாகும். ஆரியர் இங்கே பலவாயிரம் ஆண்டுகளாக நன்கு வாழ்ந்து வருவதால் அவர்களைப் பிறநாட்டார் எனக் கூற இயலாது. அவர்களுக்கும் தாய்நாடு இந்நாடேயாகும். இம்மொழியே தாய்மொழியாகும். அக்கால நாகரிகத்தை நாம் இகழலாகாது. ஏனெனின், அதுவும் அக்காலத்துக்கு ஏற்றநாகரிகமாக இருந்ததாலேயேயாம்.

"ஆனந்தபோதினி"

## 5 பெண்களை மணமுடித்தவன் கதி.

போலந்து என்னுந் தேசத்திலுள்ள றஸ்கியார் என்பவன் 5 முறை மணமுடித்தான். அவன் தான் மணமுடிக்கும் வேளையாவது சட்டப்படி நீக்காது வேறுவேறு இடங்களுக்குச் சென்று தான் முன்னர் மணமுடிக்காதவன் என்று கூறி புதுப்புதுக் கன்னியரை விவாகஞ் செய்துவந்தான். இவன் 5-வதாக மணமுடித்த பெண்ணுக்கு இவனுடைய கருமங்கள் ஒருவாறு தெரியவந்தன. அவள் இவனுடைய முந்திய மனைவியர் எங்குளர் என்பதைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு றஸ்கியாத்தின் விவாக இரகசியங்களை வெளிப்படுத்தினள். ஈற்றில் இந்த 5 மனைவியரும் ஆலோசனை செய்து தம் கணவனை ஒரு இடத்திற்கழைப்பது என்று யுக்தி பண்ணினர். ஒருநாள் 5-வது பெண், தனது நாயகனை அவசரமாகத் தனது வீட்டிற்கு அழைத்தாள். அவன் அங்கு செல்ல, தனது முந்திய மனைவியர் நால்வரும் இருப்பக் கண்டு திகைத்தான். அவனைக் கண்டவுடன் 5 பெண்களும் அவன்மீது பாய்ந்து, தம் கைகொண்டமட்டும் ஏகோபித்து அடித்தனர். சிறிதுநேரத்தில் அடிகளின் வேதனை தாங்கமுடியாமல் றஸ்கியாத் இறந்தான்.

## கடிதம்.

### 'பதார்த்தம்."

இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்களுக்கு:

ஐயா,

பதார்த்தம் எனத்தலையங்கமிட்டு ஸ்ரீ. க. பூலோகசுந்தரம், எல். ஐ. எம். அவர்கள் 22-2-34ல் வெளிவந்த இப்பத்திரிகையில் வரைந்துள்ளவையாவும் வகுப்பில் பொறிக்கப்பட்டுள்ள குறிப்புகளேயாகும். அவர் இதனைப் பகிரங்கப்படுத்தியதும் பிறர் கலங்கருதியே யென்பதில் யாவரும் மகிழ்வுறவேண்டும். ஆனால் இதன் உள்பொருள் விளங்கியுரைத்தவரேயாயினவரை வைத்தியனெனலாம். அவற்றைக் கூறுவாம்.

அவை.

முதலாவது பராவில், எட்டாத பூரண நிறைவாயும் என்றுர்.

1. பூரணமென்றதனர்த்தம்.
2. பூரணம் எவ்விதவடிவமுடைத்து.
3. எவ்வெவ்வெழுத்துகளமைந்தது பூரணவஸ்து.
4. பூரணமாயது நிறைவுபடுத்தியதெவற்றை.
5. நாமதருணலட்சண மென்ன,
6. அவையாரிடத்தேயுண்டு.

பஞ்சதன்மாத்திரையினின்று பூதங்கள் உண்டாயின வென்றுர்.

7. பஞ்சதன் மாத்திரைகள், எத் தத்துவத்தைக் கொண்டன.
8. அவற்றின் பிறப்பு விபரங் கூறவேண்டும்.
9. இவற்றினின்று பஞ்சபூதங்கள் தோன்றியதெவ்வகை.

இவரும் தெரிந்த வைத்தியர்கள் யாருமிப்பத்திரிகையிலேயே வெளிப்படுத்தவும். அவர்களையே வைத்தியர்களெனலாம்.

இங்ஙனம்,
ஆ. வயிரமுத்து,
வைத்திய நாசன்.

## யுத்தக் கப்பல்களின் அபிவிருத்தி.

சென்ற ஜனவரி மாதம் முடியவுள்ள ஒரு வருஷத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், இற்றலி, ருஷியா, ஜெர்மனி முதலாம் வல்லரசுகள் 1756 யுத்தக் கப்பல்களைப் புதிதாகக் கட்டி முடித்தனவாம்.

## ஸ்நான அறையில் இராஜதந்திரியின் மரணம்.

அங்காரா என்னும் தேசத்தில் ருஷிய ஸ்தானபதியின் காரியதரிசியாயுள்ள மிஸ்ரர் மிச்சின் என்பவர் சென்ற திங்கட்கிழமை ஸ்தானபதியின் ஸ்நான அறைக்குள் பிணமாகக் காணப்பட்டார். அவர் தம் பதவியில் நின்று விலகி ஜெகநதேசம் திரும்பி விட வேண்டுமென்று இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் ருஷிய அரசினரிடம் இருந்து உத்தரவு கிடைத்தது.


## திருவருட் பயன்

[சைவபோதம் மூன்றும் புத்தகமாகவுள்ளது]

ஸ்ரீ. சு. சிவபாதசுந்தர மவர்கள் செய்த பதவுரை, விரிவுரை முதலியவற்றோடு.

4-ம் பதிப்பு
வெளிவந்துவிட்டது.

விலை சதம் 40.] [அஞ 7.

வண்ணார்பண்ணை, 26-2-34. | மனேஜர், 'இந்துசாதனம்.'

## மலேரியா மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரம் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, "ஹிஸ்ரீயா" வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(Y. 204, 12-3—11-2-35)

# உபதேச காண்டம்.

## ஏழாவது
## பஞ்சாக்கர மான்மியச் சருக்கம்.

(முற்றொடர்.)

புலம்பு வன் மனையாளெனக் கண்ட சூரியசன்மா, இதில் ஏதோ விருத்திரமம் இருக்கிறதெனவெண்ணி இல்லத்தினுள்ளே புகுந்து பார்த்தபோது, தன் மகனும் மருகியும் வெட்டுண்டு பிணமாய்க் கிடக்கக்கண்டு இடியேறுடர்த்த மரம்போல வீழ்ந்து கதறி "ஐயோ, மக்காள்! நானோ உங்களுக்குக் கூற்றுவனானேன்; அடா, என் அருமை மகனே, உன்னையும் உன் மனைவியையும் பாவியாகிய நானன்றோ வாளால் வெட்டிக்கொன்றேன்; அந்த வஞ்சகன் ஆசக்தன் என் குடியை முடித்தானே! இனி நான் இந்த உயிரை வைத்திருக்கமாட்டேன்! ஆ, பாதகா, ஆசக்தா, நீ அடுத்துக் கெடுத்திடுவன் என்பதை அறிந்திலேனே! அடா, துரோகி, நீ என்னை நள்ளிருளிற் புலிவேட்டை யாடும்படி போக்கினை, என் குலமுதலை மருமகளோடும் என் கையினுற் கொல்லுவித்தனை! சண்டாளா, என்னைத் நிரப்பழிக்கு ஆளாக்கினையே! இனி என்னசெய்வேன்" என்று பலவாறு புலம்பிக் கலங்கினன். அயலிலுள்ள மறையவரும் ஏனையோரும் அங்கே வந்துகூடிச் சூரியசன்மன் செயலையும் நிலையையுங் கண்டு ஆச்சரியமும் அச்சமும் அடைந்து நின்றுவருந்தினர்கள்.

அப்பொழுது காதகனாகிய ஆசக்தன் வேறொரு புறத்தே வந்து நின்று "இச் சூரியசன்மனை உன்மத்தனானன்; இவன் நடுச்சாமத்திலே இரக்கமின்றிச் சினைகொண்டதாகிய பசுவை அடித்துக் கொன்றுவிட்டான்; பின் தன் மகனையும் மருகியையுங் கொன்றான்; ஆனதால் இவன் பித்தனானன் என்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை" என்று பலருங் கேட்கச் சொன்னான். அந்தணர்கள் ஆசக்தன் உரைத்த பழிமொழி உண்மைதானோ என்று அறியும்வண்ணம் அவன் சொன்ன குறிப்பின் வழி சென்று பார்த்தபோது, சினைகொண்ட பசுவொன்று அம்பேறுண்டபடி மாண்டு கிடக்கக் கண்டார்கள். அந்த அகர்த்தத்தைக் கண்ட மறையோரெல்லாரும் அடங்காச் சீற்றங்கொண்டோராய்ச் சூரியசன்மாவிடம் மீண்டு வந்து, "அடா! சண்டாளா? நீ சினைப்பசுவைக் கொன்றாய்; கோகத்தி பூண்டாய்! பழிகாரா! இவை மாத்திரமா, பெற்ற பிள்ளையையும் உற்ற மருகியையும் வாளால் வெட்டிக்கொன்றாய்; ஆதலாற் பதிதனானாய்; நீ எங்கள் கூட்டத்தில் இருக்கத்தக்கவனல்லை; உன் முகத்தில் விழித்தலுந் தோஷமாகும்; ஒருக்ஷணமேனும் இப்பட்டினத்தில் நீ தங்கவொண்ணாது; நீற்றியேற் கொல்வோம்" என்று அதட்டினர்.

பாவம்! என்ன செய்வான் சூரியசன்மா! இப்படியெல்லாம் தன்னை வெறுத்து நாட்டை விட்டகற்ற வேண்டுமென நிற்கும் மறையோரை வணங்கி, "வேதமுணர்ந்த அந்தணர்காள்; கொடியேன் சொல்வதைச் சிறிது கேட்டுக் கொண்டு அதன் பின் எனக்குச் செய்யத்தக்க தண்டனையைச் செய்யுங்கள்; இவையெல்லாம் இரண்டகனாகிய அந்த ஆசக்தன் செய்த வஞ்சனையால் வந்தன! அந்தப் பாதகன்றான்; என்னை என் குடியோடு கெடுத்தான்; எனக்குத் நிரப்பழியை ஆக்கி விட்டான்" என்று ஆசக்தன் செய்த வஞ்சனையனைத்தையும் அவ்வந்தணர்களுக்கு ஆதியோடந்தமாக எடுத்துரைத்துக் கண்ணீர் சொரியநின்றான்.

சூரியசன்மா இவற்றையெல்லாஞ் சொல்லக் கேட்ட மறையவர், அவன் செயலிற் சந்தேக முற்றாராய் அவனைப் பார்த்து "சூரியசன்மாவே, இவையனைத்தும் ஆசக்தன் சூழ்ச்சியால் விளைந்தன என்கிறாய்; எங்கள் குலதெய்வமாக எழுந்தருளிய கேதார நாதர் சந்நிதியிற் சென்று அங்குச் சிலையினால் அமைந்துள்ள இடபத்தைப் புல்லுண்ணச் செய்வையேல் நீ இப்பிழைகளைச் செய்திலையென்பதை நம்புவோம்" என்றார்கள். அதனைக்கேட்ட சூரியசன்மா மகிழ்ச்சியடைந்து "அந்தணர்காள்; கேதாரநாதர் சந்நிதியிலுள்ள இடபத்தை மாத்திரமல்ல, அத்திருக்கோயிலின் கோபுரம் தூபி மதில் முதலாம் இடங்களில் அமைந்துள்ள இடபங்களையும் ஒருங்கு அழைத்துப் பசும்புல் அருந்தச் செய்கின்றேன்; எம்முடன் வருதிர்" என்றான். உடனே எல்லாரும் கேதாரநாதர் முன்றிலையடைந்தனர். சூரியசன்மா தன் சீடருள் ஒருவனைப் பசும்புல் கொணரும்படி பணிக்க, அவன் உடனே சென்று புல் கொணர்ந்தான். சூரியசன்மா கேதாரநாதரைப் பத்திபூர்வமாகப் பணிந்தபின் அப்பெருமான் சந்நிதானத்தில் நின்றபடியே, இடத்தோறும் அமைந்துள்ள இடபங்களைக் குறித்து:

> "எட்டுமதிட் கோடு எய்திடபத் தேறுதாள்!
> நீட்டுநெடுங் கோபுரத்து நின்றோழிந்த சேவினங்காள்!
> ஆட்டுதிரைக் கங்கை அணிந்தபிரான் அஞ்சேழுத்து
> மாட்டு திருவருள் உண்டேன்றல் வருதிர்................"

எனவும், மதிலின்மேலும் கோபுரத்திலும் ஏனைய இடங்களிலும் மூக்கிலே சிலையினாற் சமைக்கப்பெற்ற இடபங்களெல்லாம் உயிர்பெற்றனவாய்க் கதறிக்கொண்டு கேதாரநாதர் சந்நிதியில் அமைந்துள்ள இடபதேவருக்கு அணித்தாக எழுந்து வந்து ஒருங்கு கூடின; சூரியசன்மா தன் சீடன் கையிலிருந்த புல்லை வாங்கி அந்த இடபங்கட்கு நீட்ட, அவை அதனை ஆர்வத்தோடு காவளைத்துக் கௌவித் தின்றன. இந்த அற்புதத்தை அங்கு வந்து கூடிய மறையோரும் ஏனையோருங் கண்டு ஆச்சரியமடைந்தாராய்ச் சிறிதுநேரம் தமபித்துநின்று பின் சூரியசன்மாவைப் பணிந்து "சூரியசன்மரே அரிபிரமரறியாத இக் கேதார நாதர் நீரே; உமது பெருமையை அறியாது அறிவில்லாச் சிறியேம் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க; உம்மிடத்தில் புண்ணியமன்றிப் பாவம் அணுகுதல் முடியுமா! மகானுபவரே, ஐந்தெழுத்தைக்கொண்டு இந்த அற்புதமெல்லாவற்றையுஞ் செய்த நீரே, எங்கட்குக் குருவாய் அமர்ந்து அப்பஞ்சாக்கரத்தை உபதேசித் தருளல் வேண்டும்" என்று மீட்டும் சூரியசன்மாவைப் பணிந்தனர். சூரியசன்மா அவர்கள்மேற் பரிவு கூர்ந்து, அம்மறையவர்க்குப் பஞ்சாக்கரத்தை விதிப்படி உபதேசித்து, ஐந்தெழுத்தை உச்சரிக்கும்போது பிராமணர் பிரணவத்தைச் சேர்த்தும், சத்திரியர் பிரணவத்தை நீக்கியும், ஏனைய இருவருணத்தோரும் சிகாரத்தை முதலாகவும் மகாரத்தை இறுதியாகவும் உருவேற்றி உச்சரித்து ஈடேறக்கடவர் என்ற சிறப்பு விதியையும் எடுத்துக் கூறினான். அச்சமயத்தில், சூரியசன்மாவின் மனைவி ஆங்கு வந்து தன்காயகனையும் அங்கு நின்ற பெரியோரையும் பணிந்து, "இறந்த பசுவும், மகனும் மருகியும் உயிர்பெற்றெழச் செய்ய வேண்டும்" என்று தன நாயகனை இரந்தாள். சூரியசன்மா அச்சந்நிதானத்திற்றானே நின்றவண்ணமாகப் பஞ்சாக்கரத்தை உருவேற்றிச் செபித்தலும் சினையாவோடு மகனும் மருகியும் உயிர்பெற்றெழுந்தனர்.

இவற்றையெல்லாம் பார்த்து எல்லாரும் அற்புதவயத்தராய் நிற்க, அங்குவந்த இடபங்கள் சூரியசன்மாவை மும்முறை வலஞ்செய்துவிட்டுப் போய்த் தங்கள் தொன்மையான இடங்களில் முன்போல அமர்ந்தன. அதன்பின் அங்கு நின்றோரெல்லாரும் சூரியசன்மாவிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இடங்களையடைந்தனர். தீயவனாகிய ஆசக்தன் தான் அங்கு நின்றாற் சாவது நிசமெனப் பயந்து காட்டில் ஓடி ஒளித்திருந்தான். அவன் சூரியசன்மனை வஞ்சிக்க முயன்றமை காரணமாகக் குஷ்டம் முதலாம் நோய்களாற் பிடிக்கப்பட்டு வருந்தி உயிர்மாண்டான். அவனது உயிரைக் கவர்ந்த காலதூதர் அவனை நரகத்தில் இட இன்னும் அவன் அங்குத்தானே கிடந்து வருந்துகின்றான். சூரியசன்மன் பின்னரும் பலகாலம் இப்பூவுலகில் அருட்செல்வம் பொருட்செல்வம் முதலியவற்றோடு இனிது வாழ்ந்து பின்னர்த் திருக்கைலாசத்தை யடைந்து சாரூப்பிய பதவிபெற்றான். ஆதலால், முனிவர்காள், பஞ்சாக்கரத்தின் மகத்துவம் இப்படிப்பட்டதென்று எம்மாற் பன்னுந்தரத்தல்ல.

> "ஆதியரு ளுருவம் பெற்றேடுத்த அஞ்சேழுத்தை
> ஓதியுணர்ந் தாரை உள்ளத் துணர்ந்தாலும்
> தீதுபிறப் பறப்பார், அன்னவர்க்குத் தீங்கிழைப்பார்
> போது நரகினுக்கும் அண்ணுத்தல் போதாதே."

முனிவர்களே, பரமசிவனுடைய திருவருள்வடிவாகிய பஞ்சாக்கரத்தைச் செபிப்பவரை நினைப்பினும் அப்படி நினைப்பவரது பிறவித்துன்பம் நீங்கும்; பஞ்சாக்கரசெபஞ் செய்வோரை அவமதிப்போர் மீளா நரகத்திற் கிடந்து அழுந்துவர்" என்று குமார முனிவர் கூறினர்.

பஞ்சாக்கரமான்மியச் சருக்கம் முற்றிற்று.

## இலங்கையில் இஞ்சி உற்பத்தி.

——(*)——

### அதன் வர்த்தக முன்னேற்றம்.

——:0:——

### விவசாயப் பகுதியாரின் முயற்சி.

அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதியாக்கப்படும் இஞ்சியைப்போல இலங்கையில் விளைவிக்க அரசினர் விவசாயப் பகுதியார் முயற்சி செய்து வருகின்றனர்.

1993 ம் ஆண்டில் 2618 அந்தர் நிறையுள்ள சுக்கு (வேர்க் கொம்பு) இந்தியாவில் இருந்து இங்கு இறக்குமதியானது. அதன் விலை 25 331 ரூபா என மதிப்பிடப் பட்டிருக்கிறது. இதே காலத்தில் இலங்கையில் விளைவிக்கப்பட்ட சுக்கும் சுக்குச் சேர்ந்த பதார்த்தங்களும் இங்கிலாந்துக்கும் ஏடனுக்கும் ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கின்றன. அவற்றின் பெறுமதி 147 ரூபா மாத்திரமே! இங்கிலாந்திற்கு, 1 அந்தரும், ஏடனுக்கு 10 அந்தரும் அனுப்பப் பட்டிருக்கின்றன

ஹொரணையிலும், டஸ் டேகோராவிலும் இஞ்சி உற்பத்திக்கென நிலங்கள் பிரத்தியேகமாய் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் நவீன விவசாய முறைகளைப் பரீட்சித்துப்பார்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இஞ்சியை வேர்க்கொம்பிற்காக உலர்த்தவும் புதிய வழி ஒன்று கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறதாம். தருந்த உரங்களை உபயோகித்துப் பார்த்ததில், நல்ல பலன் கிடைத்திருப்பதாகவும், கிராமவாசிகள் இதனைக் குடிசைத் தொழிலாகக் கொண்டு நல்ல இலாபம் அடைந்து வருவதாகவும் இப்போது தெரிகிறது.

## பௌத்தரின் பரபரப்பு.

——:*:——

### "புத்தகாயா பௌத்தருக்கே!"

——(*)——

### "சத்தியாக்கிரக" வெருட்டு.

உலகிலுள்ள பௌத்த சமய ஸ்தாபனங்களில் மிகப்பெலமுற்றதும் செல்வாக்குள்ளதுமான மகா போதிச் சங்கத்தின் தலைவரான பிரமச்சாரி தேவப்பிரிய வலிசிங்க என்பவர் வட இந்தியாவில் இப்போது ஹிந்துக்களின் ஆட்சிக்குள்ள புத்தகாயா என்னும் பௌத்தஸ்தலத்தைக் கைப்பற்ற உலகிலுள்ள பௌத்தர் யாவரும் கிளர்ச்சி செய்ய வேண்டுமென ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புத்தகாயாவிலேதான் புத்தர் நிர்வாணமடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

வலிசிங்க என்னும் மேற்படி சங்கத் தலைவர் விடுத்திருக்கும் வேண்டுகோளிற் பின்வருமாறு காணப்படுகிறது:

'பௌத்தசமயிகளுக்கு மிகப்புண்ணிய தலமாகவுள்ள புத்தகாயா அந்நியர் கைப்பட்டு அல்லலுறுகின்றது. பௌத்தர்களாகிய நாம எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்த ஸ்தலத்தை எமக்காக்கிக் கொள்ளல் வேண்டும். நாம் சத்தியாக்கிரகப் போர் ஆற்றி அந்தஸ்தலத்தைக் கைப்பற்றிக் கொள்ளல் வேண்டும்.''

இப்போது புத்தகாயா ஹிந்துக்களின் ஓர் வகுப்பினரின் ஆட்சியில் இருக்கிறது. ஆட்சி புரிபவர் மகந்து என்றழைக்கப்படுவார். அவரிடம் ஏராளமான சொத்துக்களும் செல்வங்களும் இருக்கின்றனவாம். சில சுதேசமன்னரிலும் பார்க்க அவர் அதிக செல்வம் படைத்தவரென்று சொல்லப்படுகிறது.


## அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள் — அழகாகவும்
துண்டுப் பத்திரங்கள் — முதலியன — துப்பரவாகவும்
சுவர் விளம்பரங்கள் — பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.

இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்
100000 குடைமார்க்கு ஓடுகள்
வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

கோடைகாலத்திற் பீடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
தைலத்தை
வாங்கி வைத்திருங்கள்.
இந்தியாவிற் சிறந்ததும் முதன்மையானதும்.

Y 18. 11-2-33—10-2-34-)

## இந்தியச் செய்திகள்.

### பீகார் நிலைமை.

பாபு இராஜேந்திரப் பிரஸாத் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பூகம்ப சகாய நிதிக்குச் சென்ற திங்கட்கிழமை வரையில் 15 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவிற்குமேல் சேர்ந்திருக்கிறது. சகாய நிதிக்கென இராஜப்பிரதிநிதி தாம் சேர்த்த நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா சென்ற திங்கட்கிழமையன்று அனுப்பியுள்ளார். தற்போது ஜெனிவாவில் சிகிச்சை பெற்றுவரும் வங்கத்து வீரரான ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் பீகார் பூகம்ப சேதத்தைச் சீர்செய்யும் பொருட்டுத் தாம் நிதி சேகரிக்க அனுமதி தரவேண்டுமென்று மகாத்மாஜிக்குத் தந்திச் செய்தி அனுப்பியிருக்கின்றனர்.

### ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

சென்னையிற் பர்மாவில் உள்ள முஸ்லீம் மாணவரின் மகாநாடு ஒன்று நடந்தது. ஸ்ரீமதி சரோஜினி அம்மையார், மிஸ்டர் எச். ஏ. ஜி. ஜ்ஞ முதலாம் பிரமுகர்கள் விஜயஞ் செய்தனர். மகாநாட்டிலிருந்து போது சரோஜனி அம்மையார் ஓர் சிறந்த சொற்பெருக்கு செய்தார். "ஹிந்துக்கள், முஸ்லீம்கள் என்னும் இரு பகுதியாருக்கும் இந்தப் பாரத தேசம் தாய்நாடாகும். தாய்நாடு அடிமையை வேண்டுமானால், சுதந்திரம் பெற வேண்டுமானால், இரு சமூகத்தினரும் ஒற்றுமைபூண்டு வாழவேண்டும்." என்று அம்மையார் குறிப்பிட்டார். சரோஜினி அம்மையார்போன்றவர்கள் எப்படிக் கூறினாலும் என்? ஷவுகத்அலி, ஜின்னா, ஜெஜ்ஜி, பரமானந்தர் முதலாம் வகுப்புவாதிகள் இருவகுப்பினர்க்குமிடையில் இருக்கையில் அவர்களைத் தட்டிக்கொடுக்க பிரிட்டிஷார் இருக்கையில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுங் காரியமா?

### புரட்சிக்கட்சியினர்.

வங்காள தேசத்தைச் சேர்ந்த புரட்சிக்கட்சி வாலிபரைத் தேடித்தேடிப் பிடித்துச் சிறைப்படுத்துவதில் இந்திய அரசினர் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனராம்: சென்ற திங்கட்கிழமை சிட்டகாங்கிற்குச் சமீபமாகவுள்ள பத்தியாபாத் என்னுங்கிராமத்திற்குப் பொலிசார் சென்று 13 வாலிபரைச் சிறையாக்கினராம்.

சுவ்வாலிபர் வசம் கழல் துப்பாக்கிகளும் சட்டிகளும் காணப்பட்டனவாம். இவர்களில் எத்தனைபேர் உண்மைக் குற்றவாளிகளோ அறியோம்!

### பாரதநாட்டில் அழகுள்ளபெண்கள் வசிப்பது பாஞ்சாலத்திலாம்!

பிரபல பாஸ்கோப் நடிகரான ஹிமன்ஸ்ராய் என்னும் வங்காள அறிஞர் பாஞ்சாலத்தைச் சேர்ந்த லாகூரில் ஓர் கூட்டத்திற்பேசுகையில் இந்தியாவின் மற்றப்பாகங்களைவிட பாஞ்சாலத்தில்தான் சௌந்தர்யமுள்ள ஸ்திரீ புருஷர்கள் அதிகமாக இருப்பதாகவும், பாஸ்கோப் தொழிலுக்கு இது அதிக உபயோகமாகுமென்றும் கூறினர்.

### சாராயம் விற்றதாக.

காரைநகரைச் சேர்ந்த நாகமுத்து வேலுப்பிள்ளை என்பவர் சென்ற டிசெம்பர் மாதம் 29-ந் தேதி சட்டவிரோதமாகச் சாராயம் விற்றனர் என்று மதுப்பரிசோதகர் அரியரத்தினத்தால் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார். எதிரிக்காக நியாயதுரந்தரர் ஸ்ரீ ரீ வீ. இராசரத்தினம் ஏற்பட்டனர்.

எதிரி சாராயத்தை விற்கவில்லை; விருக்கின்பேரில் லெட்சுமி என்னும் பெண் ஒருத்தியைத் தேடிவந்த மதுப் பகுதியார் விளக்கக் குறைவால் எதிரியைப் பிடித்தனர். சிறைப்பட்டவுடன், தன்னை ஓர் பொலிஸ் விதானை முன்னர் அல்லது ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதிபதி முன்னர்க் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என எதிரி கூறினர். மதுப்பகுதியார் அதனைக் கேளாது, 8 மைலுக்கப்பாலுள்ள தமது ஸ்தானத்திற் கழைத்துச் சென்றனர். அங்கு எதிரியைப் பயமுறுத்தித் தான் சாராயம் விற்றதாக எழுதும்படி வற்புறுத்தினர் என்று எதிரிபக்க நியாயதுரந்தரர் கூறினர்.

விசாரணையின் பின், நீதிபதி எதிரியை நிரபராதியெனக் கண்டு அவரை விடுதலையாக்கினர்.

## பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அனர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனலையத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

சென்ற வெள்ளிக்கிழமை யன்று 300 ரூபாயும், முன்னர் 200 ரூபாயும், ஆக 500 ரூபா பீகார் பிரபல தேசீயத் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

மானேஜர்.

| | ரூ | ச |
|---|---|---|
| முன்னர் சேகரிக்கப்பட்டது. | 809 - 69 | |
| V. செல்வத்துரை, வட்டுக்கோட்டை | 1 00 | |

கரம்பன் ஸ்ரீ சண்முகநாத வித்தியா சாலையாரால் சேகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ N. அம்பலவாணர் | 2 00 | |
| ஸ்ரீமதி P. ரகுபதி | 2 00 | |
| ஸ்ரீமதி N. செல்லையா | 1 00 | |
| ,, N. சுப்பையா | 1 00 | |
| ,, S. கந்தையா | 1 00 | |
| ,, S. சுந்தரம்பிள்ளை | 1 00 | |
| ஸ்ரீ V. நாகமணி | 1 00 | |
| ,, V. காசித்தம்பி | 1 00 | |
| ஸ்ரீமதி ருக்குமணி | 25 | |
| 3 பிள்ளைகள் | 30 | |
| 45 பிள்ளைகள் | 45 | |
| | | 11 00 |

தலவாக்கொல்லை P W D உத்தியோகத்தர் ஸ்ரீ K. கந்தையாவாற் சேகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ M. குமாரசுவாமி | | |
| P. W. D. Somerset | 5 00 | |
| M. P. பொன்னையா | 1 00 | |
| K. சுப்பிரமணியம் | 1 00 | |
| T. கதிர்காமத்தம்பி | 1 00 | |
| A. இராசையா | 1 00 | |
| A. பொன்னையா | 1 00 | |
| | | 10 00 |

இரத்தினபுரி இந்துவாலிபர்சங்கக் காரியதரிசி ஸ்ரீ பெ. கணபதிப்பிள்ளை சேகரித்தது.

| | | |
|---|---|---|
| இந்துவாலிபசங்கம் | 1 00 | |
| மா. கந்தையபிள்ளை | 1 00 | |
| அ. தில்லைபம்பலம் | 5 00 | |
| பொ. சின்னையா | 5 00 | |
| வே. செ. துரையப்பா | 2 00 | |
| சி. கார்த்திகேசு | 1 00 | |
| மு. சபாரத்தினம் | 1 00 | |
| பெ. கணபதிப்பிள்ளை | 1 00 | |
| சே. அ. அப்துல்மஜீது | 50 | |
| ச. வயிரமுத்து | 50 | |
| மு. ந. சண்முகம் பண்டிதர் | 50 | |
| க. வ. வேலுப்பிள்ளை | 1 00 | |
| வே. கா. ஆறுமுகம் | 1 00 | |
| கு. பொன்னம்பலம் | 1 00 | |
| இ. மகேந்திரன் | 2 00 | |
| செ. நாகரத்தினம் | 2 00 | |
| அ. பொன்னம்பலம் | 1 00 | |
| க. நாகலிங்கம் | 50 | |
| பொ. முத்தையா | 2 00 | |
| ம. மாணிக்கவாசகர் | 1 00 | |
| | | 30 50 |

ஸ்ரீ A. தியாகராசா விக்னேஸ்வர வித்தியாசாலை தோல்புரம் மூலமாக.

| | | |
|---|---|---|
| மு. கதிர்காமத்தம்பி | 50 | |
| ச. இராமச்சந்திர ஐயர் | 25 | |
| இ. சிற்சிங்கம் | 50 | |
| ஆக 1 25—16 சதம் மணிஓடர்ச்செலவு | | =1 09 |
| சண்டிருப்பாய் சைவாங்கில வித்தியாசாலை மாணவர் | | 1 50 |
| ஆக ரூ. | | 864-78 |

### பிரபுக்கள் சபையில் இலங்கையைப் பற்றிக் கேள்வி.

பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையில், இலங்கை ராசியத்திட்டத்திலுள்ள பெரும பிழைகளைப்பற்றி என்ன நடவடிக்கை பிரிட்டிஷ் அரசினர் எடுக்கப்போகின்றனர் என்று ஹால்ஸ்பரி பிரபு ஓர்கேள்வி கேட்பார்.

## சைவ பரிபாலன சபை.

### அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(22 2—34-ன் தொடர்ச்சி.)

"அப்பொழுது இராமநாதரவர்கள் எழுந்து அங்கு வாசிக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரங்களுக்கு விடையாக, மானுடதேகமெடுத்தார் யார்க்கும் பரோபகாரசிந்தையே யிருத்தல் வேண்டுமென்றும், அது அன்பினாலே ஆதல் வேண்டுமென்றும், அன்பானது எவ்வகைத்தினதென்றும், இவைகளோடு சற்சமயமாகிய சைவசமயத்தை வளர்த்தல் சைவர்களாகிய நமக்கெல்லா மின்றியமையாப் பெருங்கடமையென்றும், அதை வளர்த்தற்பொருட்டு வித்தியாசாலைகளே ஆவசியகமான தென்றும், ஆதலால் இப்பொழுது சைவபரிபாலன சபையாரால் ஸ்தாபிக்கப்படும் வித்தியாசாலைகளை நன்னிலைபரத்துக்கு கொணர்விக்குமாறு சைவர்களாகிய யாவரும் இயன்ற இயன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்றும், தாஞ் சென்ற சென்ற விடங்களிலே வாசிக்கப்பட்ட பத்திரங்களில் "தாங்கள் செய்த பரோபகார நன்மைகளுக்குப் பிரத்தியுபகாரம் நம்மாற் செய்யவல்லேமல்லேம்" என்று எல்லோரும் சொல்லுகின்றமையால் நீங்கள்யாவரும் எனக்குச் செய்யும் பிரத்தியுபகாரம், சைவபரிபாலன சபையோடு சேர்ந்து சைவத்தை வளர்த்தலே என்றும் யாவர்மனது முருகுமாறு அதி சாதுரியத்துடன் பிரசங்கித்து எண்ணிறந்த சனங்கள் கூடியிருந்த அச்சபையாருக்கு வந்தனங்கூறி முடிக்க, சைவபரிபாலன சபையின் தலைமைப்பிரசாரகரும், வித்துவான்களும், அவருடைய பெருந்தன்மைகளையும், நன்மைகளையும் பேசி வாழ்த்துச்சொல்ல, பலபிராமணர்களும், பிரபுக்களும் ஆசீர்வாதங்கூற ஸ்ரீ இரகுநாத முதலியார் அ மயில்வாகனப்பிள்ளை முதலிய பல பிரபுக்கள் புஷ்ப மாலைகளும், செண்டுகளும் கொடுத்து பனிநீர்மாரி சொரிய நானாவித வாத்தியங்களொலிக்கச் சகலரும் மிக்க உபசாரஞ்செய்து அனுப்பினார்கள்."

விகிர்தினு கார்த்திகைமீ 1உ (15–11–1890) கூடிய அதிகாரசபைக் கூட்டத்தில் "ஸ்ரீமான் தா. செல்லப்பாபிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், சி. நாகலிங்கபிள்ளை பிரதிஅக்கிராசனாதிபதியாகவும், வி. காசிப்பிள்ளை இலேககராகவும், த. கைலாசபிள்ளை உதவி லேககராகவும், சித. மு. பசுபதிச்செட்டியார் தனாதிகாரியாகவும், ந. ச. பொன்னம்பலபிள்ளை, அரு. சபாபதிப்பிள்ளை, இ. மயில்வாகனபிள்ளை, சி. சின்னையாபிள்ளை, இ. இரகுநாத முதலியார், வே. முத்துவேற்பிள்ளை, சி. இராமப்பிள்ளை என்பவர்கள் ஒழிந்தஅங்கமாகவும், திருவாக சபையானது இப்பன்னிருவரையும் உடைத்தாக வரிக்கப்படுதல் வேண்டும்" என்று கு. செல்வநாயகம்பிள்ளை பிரேரித்தனர் அதை ச. சண்முகபிள்ளை அநுவதித்தனர். அது சர்வசம்மதமாயிற்று.

#### இச்சபையின் உத்தேசம்.

"அவசியமென்று காணும் இடங்களில் தமிழ் வித்தியாசாலைகளும், இங்கிலிசு வித்தியாசாலைகளுந் தாபித்து நடத்துதலும், முன் தாபிக்கப்பட்டுள்ளவித்தியாசாலைகளை அவற்றின் அதிபதிகள் ஏற்று நடத்தும்படி கேட்குங்காலத்தில் தக்கதென்று காண்கிறவைகளை ஏற்று நடத்துதலும், புதினப்பத்திரிகைகள், துண்டுப்பத்திரிகைகள், துண்டுப் புத்தகங்கள் அச்சிட்டு வெளிப்படுத்தி சைவசமய விருத்தி செய்தலும், சைவ விருத்திக்கு ஏற்றவைகளாய் சைவசமய உண்மைகளை அறிவிப்பனவாய் இங்கிலிசு தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் பாஷைகளிலுள்ள புத்தகங்கள் சம்பாதித்துப் புத்தகசாலை தாபித்தலும், பிள்ளைகளைச் சேர்த்துப் பிரசங்கஞ் செய்யப் பயிற்றுதலும், இச்சபைக்குக் கிளைச்சபைகளைப் பிறவிடங்களில் ஏற்படுத்துதலும், இன்னும் கல்வி விருத்தி சைவசமயவிருத்தி என்னும் இரண்டின்பொருட்டு அவசியமென்று காண்பவைகளை செய்தலுமேயாம்." என்பன ஆதியான பத்துவிதானங்கள் த. கைலாசபிள்ளை பிரேரிக்க அதனை சி. நாகலிங்கபிள்ளை அநுவதித்தனர். அது சர்வ அங்கீகாரமாயிற்று.

"அப்போது ஸ்ரீ சி. நாகலிங்கபிள்ளை தம்முடைய பராமரிப்பின் கீழிருந்த டவுன் ஹைஸ்கூல் (Town High School) என்னும் பள்ளிக்கூடத்தை ஹிண்டு ஹைஸ்கூல்

"HINDU HIGH SCHOOL"

என்னும் பெயரோடு நடத்திக்கொள்ளும்படி அதைச் சபையில் ஒப்பித்தனர்.

"திருவாகசபையார் இனிக் கூடும்போது ஹிண்டு ஹைஸ்கூல் என்னும் இப்பள்ளிக்கூட விசாரணையைத் தங்களுள் ஸ்ரீ கா. செல்லப்பாபிள்ளை, சி. நாகலிங்கபிள்ளை, த. கைலாசபிள்ளை, சித. மு. பசுபதிச்செட்டியார் அரு. சபாபதிப்பிள்ளை என்னும் ஐவருடைய பொறுப்பில் விட்டு, அவருள் ஸ்ரீ நாகலிங்கபிள்ளையையே மனேசராக நியோகித்துக்கொள்ளுதல் நல்லது" என்று ச. சண்முகபிள்ளை பிரேரித்தனர். அதை வி. காசிப்பிள்ளை அநுவதித்தனர். அது சர்வ சம்மதமாயிற்று.

நமது சமயத்துக்கும் ஆசாரத்துக்கும் மாறுபாடில்லாத இங்கிலிசுக் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடம், நமது சமயத்துக்குச் சத்துருக்கள் கடக்காத பெரிய அரணுதும். இந்த அரண் 1890ம் வருஷத்திலே பூர்த்தியாயிற்று இச்சபை தொடங்கிய முதல் வருஷத்தில் பிரசங்கம்மாத்திரம் நடந்துவந்தது இரண்டாம் வருஷத்திலே பிரசங்கத்தோடு இந்துசாதனம் என்னும் பத்திரிகையையும் தொடங்கி நடத்தலாயிற்று. மூன்றும் வருஷத்தில் பிரசங்கம் பத்திரிகை என்பனவற்றோடு ஹிந்துஹைஸ்கூல் என்னும் பள்ளிக்கூடமும் தொடங்கலாயிற்று. இப்பள்ளிக்கூடம் தொடங்கும்போது இதிலே தலைமை உத்தியாயராகக் கடமைபார்த்தவர் ச. அப்பாபிள்ளை ஆவர். அப்போது சேர்ந்த பிள்ளைகளின்தொகை 80 ஆகும். சோதிரியிலே சாப்டல் தெருவிலே இருந்ததும் (Kock) பாதிரியாராலே தொடங்கப்பட்டதுமான வித்தியாசாலை 1889ஆ புரட்டாதிமீ சேணியதெருவிலேயுள்ள ஒரு வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு அதிலே நடைபெற்று வந்தது. இந்துஹைஸ்கூல் தொடங்கிய உடன் அப்பள்ளிக்கூடத்திலே (Kock's ஸ்கூல்) படித்த பிள்ளைகளெல்லாரும் இப்பள்ளிக்கூடத்துக்குவரலாயினர். அதனாலே, அதிலே கல்விகற்பித்த உபாத்தியாயர்களைச் சபையார் இப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக நியமித்தார்கள். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் இ அருளம்பலம், மா. சபாபதி, ச பொன்னுத்துரை, கா. பொன்னையா, சி. காசிப்பிள்ளை ஆகியவர்களாவர். இவர்களின் நியமனத்தின்பின்னர் பிள்ளைகள் தொகை தினந்தோறும் விருத்திபெற்றது. 1890ஆ மார்கழிமீ இங்கே கல்வி கற்ற பிள்ளைகள் தொகை 130 ஆகும்.

1890ஆ மார்கழிமீ 10உ இப்பள்ளிக்கூட நிலத்தில் ஆறேகாலே அரைக்காற்பரப்பு இச்சபை இலேககர் வி. காசிப்பிள்ளை பெயரிலும், ஒன்றேகாற்பரப்பு தனாதிகாரி பசுபதிச்செட்டியார் பெயரிலும் சாதனங்கள் எழுதலாயின.

இலக்கண இலக்கியங்களோடு சமயவுணர்ச்சிக்கடுத்த நூல்களைக் கற்பிக்குமாறு இரு தமிழ்ப்பண்டிதர்களை நியோகித்துக் கற்பித்தார்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மற்றெவ்வித்தியாசாலைகளிலும் இதுவே மாணவர்களினுடைய சம்பளத்தாற் குறைவுடையது இதிலே கற்ற மாணவர்களுக்காக வித்தியாசாலையின் பக்கத்திலே விடுதிச்சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதிலே சாப்பிட்ட மாணவர்களிடம் மூன்றுவிதமான சம்பளம் வாங்கப்பட்டது. மிகச் சிறுவர்களுக்கு மூன்று வேளைக்கு தினம் ஒன்றுக்கு 12½ சதமும், நடுத்தர மாணவர்களுக்கு 16 சதமும், வளர்ந்தவர்களுக்கு 20 சதமுமாகும். இம்மாணவர்களுக்கு இரவில் 2½ மணிநேரமும் காலையில் 2½மணிநேரமும் நாலுபாத்தியாயர்களை நியோகித்து பிள்ளைகளிடம் சம்பளம்வாங்காது படிப்பித்தார்கள். இவ்விடுதிச்சாலையிலே தங்கியிருந்து கல்விகற்றவர்கள் வட்டுக்கோட்டை S. வைத்தியலிங்கம் B. A., தற்காலம் மட்டக்களப்பிலே மாகாண வைத்தியராயிருக்கும் டக்டர் C. சிவசிதம்பரம், பிரக்கிராசியார் V. M சரவணமுத்து, M. S. முருகேசு, அவரது சகோதரர் நியாயவாதி M. S. இளையதம்பி ஆகிய அனேகராவர். —(தொடரும்.)

இ ஞ ம்! இ ஞ ம்!!

## மகாராஜ தத்துவ சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே வேளையில் ஆண்சிங்க பாவீர்கள்.

தங்கம் வெள்ளி முத்து பவளம் அயம் காந்தம் அம்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்றது.

இதன் முக்கிய குணம்:—

காக்கை இடுப்புவலி கைகால் அசதி குடி முதலிய மற்ற ரோகங்களனைத்தையும் சக்காரஞ் செய்யக்கூடியது இப்பூவுலகில் இந்த லேகியமொன்றே. முழுவிபரக்கேட்லாக் இலவசமாக அனுப்பப்படும்; அவரவர் வியாதிக்குத் தக்கபடி ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடவேண்டும்.

1 மண்டலம் சாப்பிடின் ரு. 10 0 0. ½ மண்டலம் ரு. 5 0 0. ¼ மண்டலம் ரு. 2 1 2 0

ஹக்கீம் V. A. றஜாக் கம்பெனி,
பறச்சிப் பேட்டை, (S. I.).


(Y. 147. 20-11-33to19-1!-34.)

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

## பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம்



(19-2-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
Phone No. 93. யாழ்ப்பாணம்.
19-2-34.

(Y. 3. 26-4-34).

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை கூடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமெடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே செல்லையாபிள்ளை.-316—ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் சுன்னுகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்ருர்.

Y. 2 31-3-34.)

## பிரப்பங்குளம் மரக்காலை.

எங்கள் மரக் காலையில் பனைமரம், சலாகைகள், பாலை, வேம்பு, பலா, முதிரை, மா, சமண்டலை, சப்புமரம், வேண்டிய பிரமாணமுள்ள திராந்திகள், பலகைகள், சட்டங்கள், வாங்கு மேசை அலுமாரிகள், விறகு என்னுமிவைகள், வைக்கோல் நெல் இன்னும் வேண்டிய பொருள்களும் எந்த நேரமுங் கொடுக்கப்படும்.

ஒருமுறை எங்கள் சாலையை வந்துபாருங்கள்

மு தம்பியையா,
பிரப்பங்குளம்ரோட்டு
(Y. 37. 9-8-3-34.) (வி) வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிருர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகஜனங்களுக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முன்ஸி விதை, சாதப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாகிக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரிகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா கூ0 கால்ருத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு

(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலே ன்.

## புறுடென்ஷல் வீயாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/வீதம்

1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/= வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 வீதம்,

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினுலேயே மேற்கூறிய பெரும நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீயாத் திருவதானுல்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்ருர்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது

நமது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. நிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. இரத்தினசபாபதி,
Asst. Inspector,
Manipay.

க. சொர்ணலிங்கம்,
வட இலங்கை மேற்பார்வைக் காறன்,
மானிப்பாய்.

Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd. Colombo

(Y 180 1-1-34 to 31-12-34) வி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday 1st March 1934.